வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.139/20

வழக்கு சாட்சி - அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கணேசன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராஜேந்திரன் | தொழில் | கூலி |
| கிராமம் | பிசிபட்டி | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.24

**(** எதிரி ஆஜர். **)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 21.11.19 அன்று 3.30 மணியளவில் வாட்டர் டேங்க் அருகில் எனது பெரியப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு நானும் சதீஷ் என்பவரும் சென்றபோது விபத்து நடந்த இடத்தில் பிசிபட்டி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டும் படம் வரைந்துக்கொண்டிருந்தார்கள். அதில் நானும, சதீஷ் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். பார்வைமகஜர் அசாஆ 2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்த நபர் எனது பெரியப்பா என்றால் சரிதான். வரைபடத்தை நான் படித்து பார்த்து தான் கையெழுதது செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் ரோட்டை கடப்பதற்கு இடைவெளி இருந்ததா என்றால் கிழக்கு பக்கமாக இருந்தது. சம்பவ இடத்தில் ரோட்டை குறுக்கே கடப்பதற்கு சாலை குறியீடு இருந்தது என்றால் இருந்தது. வரைபடத்தில் அவ்வாறு சாலை குறியீடு எதுவும் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இறந்த நபர் எனது பெரியப்பா என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும், விபத்து எனது பெரியப்பா ரோட்டை குறுக்கே கடக்கும் போது ஏற்பட்டது என்றால் சரியல்ல.